மூதூர் பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மூதூர் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மூதூர் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்@ராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்@ராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | கலைஞர்களை கௌரவிப்பதற்காக ரூபா 150,000 செலவாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் இக் கொடுப்பனவில் ரூபா 109,500 செலவிடப்படாது வைப்பிலிடப்பட்டிருந்து. இதனால் மீளாய் வாண்டுச் செலவினம் ரூபா 109,500 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக அவ் வருடத்தில் நடாத்த முடியாமல் போயுள்ளது. 2022.03.31ல் இந் நிகழ்வு நடாத்தப்பட்டுள்ளது. | மீளாய்வாண்டில் மேற் கொள்ளப்பட்ட செலவுகளே கணக்குகளில் சாட்டுதல் செய்யப்படல் வேண்டும். |
| ஆ) | உள்@ராட்சி உதவி ஆணையாளரினால் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த இயந்திர உபகரணங்களிள் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை கிடைக்கப்பெற்ற வருமானம், குப்பை உறைகள் மற்றும் எல்லைக் கோட்டு அத்தாட்சிப் பத்திரக் கட்டண வருமானங்களின் கூட்டுமொத்தம் ரூபா 3,291,700 கணக்கீடு செய்யப்படாமையால் திரண்ட நிதியம் அப் அபெறுமதியால் குறைவாக காட்டப்பட்டுள்ளது. மேலும் மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 1,401,750 வருமானம், வைப்பாக கணக்கில் உள்ளடக்கபட்டுள்ளது. | பிராந்திய உள்@ராட்சி உதவி ஆணையாளரினால் சபைக்கு வழங்கப்பட்ட JCB, Motor Grader வாகனங்களின் வாடகை வருமானமாக வைப்பில் உள்ளவற்றை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் வருமானம் உரிய நிதியாண்டில் சாட்டுதல் செய்யப் படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் இல. 182 | 2,324,357 | பிரதேச சபைக்கு வருமதியான ஐம்பது ரூபாவினை விஞ்சுகின்ற தொகையினை பதிவழிப்பதற்கு அமைச்சரின் அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிலுவை வருமானம், ஆரம்ப நிலுவையிலிருந்து பதிவழிக் கப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் இவ்வாறான பதிவழிப்புகள் மேற் கொள்ளப்படும் போது அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பிரதேச சபை சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமானம் 371 | 11,129,351 | செலுத்தப்பட்ட முற்பணங்கள் அனைத்தும் வேலையை முடிவுறுத்தப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 15 வருடங்களிற்கு மேல் சீர் செய்யப்பட்டிருக்க வில்லை. | குறிப்பிட்ட நிலுவை மீதி 2006 ஆம் ஆண்டிற்கு முற்பட்டவையாகும் .இதனால் அதற்கான ஆவணங்கள் தற்போது எம்மிடம் இல்லை. | நிதிப்பிரமாணத்திற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | ஏனைய சுற்றறிக்கை | | | | |
| (i) | நிதிப்பிரமானம் 880 மற்றும் 2021 ஆகஸ்ட் 16 ஆம் திகதிய PT/03/2021 ஆம் இலக்க மாகாண நிதிச் சுற்றறிக்கை | 97,500 | பிரதேச சபையில் பணியாற்றுகின்ற, பாதுகாப்புப் பணம் அறவீடு செய்யப்பட வேண்டிய 16 உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு வைப்புப்பணம் அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | சுற்றறிக்கைக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானங்கள் ரூபா 24,690,240 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 17,810,238 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அ) வீதவரி மற்றும் வரி | | |
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பந்தி 158(1) ற்கு அமைவாக வீதவரி நிலுவையை அறவிடப்படாமையால் 13 வருட காலமாக நிலுவையாக காணப்பட்ட ரூபா 6,488,977 ஆன கூட்டுமொத்தமான வீதவரிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது அறவிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன. | வீதவரி நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| ஆ0 வாடகை | | |
| (i) பஸ்தரிப்பு நிலைய கடை வாடகை | | |
| 1) 2021 திசெம்பர் 31 ஆம் திகதி நிலுவைத் தொகையாக ரூபா 1,062,101 ஏழு வருடமாகக் காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வாடகை நிலுவை படிப்படியாக அறவிடப்பட்டுக் கொண்டிருப்ப துடன் செலுத்தத் தவறியவர் களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| 2) 2016 ஆம் ஆண்டு, வாடகை உடன் படிக்கையின் பிரிவு 2 இன் பிரகாரம் ஆண்டு தோறும் வாடகைப் பெறுமதியில் 10% அதிகரிப்புடன் வாடகை செலுத்துவதற்கு உடன்பட்டிருந்த போதிலும் அதிகரிப்புத் தொகையில் வாடகை அறவீடு செய்யப் படாமையினால் சபைக்கு ரூபா 370,348 வருமானம் இழப்பாக ஏற்பட்டுள்ளது. | 10% பெறுமதியினை அதிகரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஒப்பந்தத்திற்கு அமைய வாடகையை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) சந்தைக்கடை வாடகை | | |
| 1) சந்தைக்கடை வாடகை தொடர்பில் 1 தொடக்கம் 13 வருட நிலுவையாகவுள்ள ரூபா 529,670 இனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தரவுகள் உள்ள காலங்களை வைத்து எதிர்காலங்களில் அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவைகளை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(iii) இறைச்சிக்கடை வாடகை

| | | |
|---|---|---|
| 1) கோழி இறைச்சிக் கடைகளிடமிருந்து வாடகை வருமான நிலுவையாக 2020 மற்றும் 2021 ஆம் நிதியாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 3,407,886 அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது கோழி இறைச்சிக் கடைகளுக்கான குத்தகை கேள்வி கோரல் மேற்கொள்ளப் படவில்லை. அத்தோடு நிலுவையாக காணப்படும் ரூபா 3,407,886 பதிவழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும். | நிலுவையை சீர்செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| 2) 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, குத்தகை நிலுவை ரூபா 7,279,598 ஆகக் காணப்படுவதுடன் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான குத்தகைப்பணம் முழுமையாக அறவிடப்பட்டுள்ளன. நீண்ட காலமாக காணப்படும் ரூபா7,279,598 நிலுவையினை சீர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவையை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 516,854 குறித்த செயற்திட்டத்திற்கு பயன்படுத்தாது ஏனைய வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. | சபையின் வருமானத்திற்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். | ஒதுக்கீடு உரிய செயற்திட்டத்திற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா. 54,722,750 பெறுமதியான விடயங்களிற்கு காணி உறுதி எடுத்தல், பதிவேடுகளைப் பராமரித்தல் போன்ற நடவடிக்கைகள் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காணி உறுதி எடுத்தல் மற்றும் பதிவேடுகளில் பதிதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | உள்@ராட்சி மன்ற பங்கேற்பு முறையிலான அபிவிருத்தித்திட்டம் (LAPDP 2019) பிரகாரம் 4 ஆண்டு திட்டத்தில் 130 செயற்திட்டங்கள் நடைமுறைப் படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் 4 செயற்திட்டங்கள் மாத்திரமே 03 ஆண்டுகள் கடந்த நிலையில் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 3,333 மில்லியனான மிகுதி 126 செயற் | திட்டத்திற்கான நிதிகள் கிடைக்கப் பெறும் அடிப்படையிலேயே இத் திட்டமானது நடைமுறைப்படுத்தப் படுவதனாலும் சபையில் மட்டப் படுத்தப்பட்ட நிதி காணப்படுவதால் குறிப்பிட்டளவு திட்டத்தினையே அமுல்படுத்தக்கூடியதாக இருந்தது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திட்டங்களும் நடைமுறைப்படுத்தப் படாது ஏனைய புதியதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், உள்@ராட்சி மன்ற பங்கேற்பு அபிவிருத்தித்திட்டம் வினைத்திறனுள்ள தாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | ரூபா 555,998 பெறுமதியுடன் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி சேமிப்புக் கணக்கு மீதிகள் 12 வருடங்களிற்கு மேலாக செயற்படாதிருந்ததுடன் நிலையானஅபிவிருத்தி நோக்கங்களிற்கு முதலிடப்பட்டிருக்கவில்லை. | கணக்குகளில் இருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகைகள் ஒவ்வொரு வருட இறுதிக் கணக் கறிக்கைகளிலும் வட்டி வருமானமாக உள்வாங்கப்பட்டு கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் கொவிட் 19 தொற்று ஏற்பட்டு அசாதாரண சூழ்நிலையினால் கடைகள் மூடப்பட்டமை பின்பும் கடைகள் திறக்கப்பட்டு மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்பட்டமை காரணமாக ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 5,770,983 பெறுமதியான கழிப்பீடுகள் உரிய அதிகாரிகளிடமிருந்து முன்னனு மதியின்றி நிதிக்கூற்றில் கழித்துக் காட்டப்பட்டுள்ளது. | ஆவணங்கள் உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்றதும் தங்களுக்கு அதன் பிரதியொன்று அனுப்பி வைக்கப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை 5 விடயங்களுக்காக மாத்திரம் துணைச் சட்டங்கள் விதிக்கப் பட்டிருந்தன. இதனால் மிகுதி 25 உபவிதிகளும் அனுமதிக்கப்படாததனால் அதனால் கிடைக்கும் வருமானத்தை அறவிட முடியாமலுள்ளது. | பிரசுரிப்பு நடவடிக்கை மேற் கொள்வதற்காக அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | துணைச் சட்டங்கள் விதிக்கப்பட்டு தேவையான மேற்பார்வை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| | **பயன்படுத்தப்படாத சொத்துக்கள்** | | |
| (அ) | ரூபா 4,967,426 பெறுமதியில் 2014 ஆம் ஆண்டு தோப்பூரில் அமைக்கப்பட்ட 12 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதி 07 ஆண்டுகளாக வாடகைக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தோப்பூரில் அமைக்கப்பட்ட எதிர் காலத்தில் அவற்றை திருத்தி வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | சம்பூரில் ரூபா 3,669,340 பெறுமதியில் 2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட சந்தைக்கட்டடம் 04 ஆண்டு காலமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சம்பூரில் உள்ள சந்தைக்கட்டடம் வியாபாரிகளால் பயன்படுத்தப் படாததால் வியாபாரம் குறைவாக காணப்படுவதால் பொறுப்பேற்க வியாபாரிகள் முன்வராத காரணத்தினாலும் பயன்படுத்தப்படுவ தில்லை. அதற்கான மாற்று ஒழுங்கு மேற்கொள்ளப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 2021.09.29 ஆம் திகதிய, 01/2021 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 2.1 இற்கமைவாக பிரதேசசபைத் தலைவர் மற்றும் பிரதேச செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதிகளுடன் மூன்று பேர்களைக் கொண்ட குழு வொன்றின் சிபார்சு பெற்றுக்கொள்ளாமல் சனசமுக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசுகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட சங்கங்களுக்கு கூட்டுமொத்தம் ரூபா 19,464,854 ஆன ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. | சனசமுகஅபிவிருத்தி நிலையங்களுக்கு வழங்குவதற்கு சனசமுக அபிவிருத்தி உத்தியோகத்தரின் சிபாரிசு இல்லாமல் கொடுக்க முடியாது அவருடைய சிபாரிசு திருப்தி ஆகியவைகள் பெற்ற பின்பே சனசமுகநிலையங்களுக்கு வழங்கலாம். | சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | **தோப்பூர் சிறுவர் பூங்கா புனரமைப்பு - ரூபா 3,000,000** | | |
| | தோப்பூர் சிறுவர் பூங்கா புனரமைப்பு செயற்திட்டம் ரூபா 2,718,202 செலவு மேற்கொள்ளப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருப்பினும் பராமரிப்பிற்கென தொழிலாளர்களை நியமிக்கப்பட்டிருக்க வில்லை. அத்தோடு, சிறுவர் பூங்கா | குறிப்பிடப்பட்ட BOQ No:39 மற்றும் 03 வேலைகள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரன சூழ்நிலைமை காரணமாகவும், பொருட்களின தட்டுப்பாடு காரணமாகவும் பூர்த்தி செய்யப்படாமல் போனது | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பிற்பகுதி ஆபத்தான நீர்நிலையிற்கு அருகாமையில் காணப்படுவதோடு சிறுவர் விளையாடு வதற்கேற்ற வகையில் பொருத்தமான தயார் நிலையில் காணப்பட்டிருக்க வில்லை. | ஆனாலும் தற்போது குறிப்பிட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | |
| ஆ) மூதூர் பொழுதுபோக்கு பூங்கா நிர்மாணம் | | |
| 1) ரூபா 81,000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்களைப் பொருத்துதல் வேலையானது வேலை நிறைவேற்றறிக்கையின் விபரத்திற்கு அமைய காணப்பட்டிருக்கவில்லை. | இனி வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| 2) மேற்படி நிர்மாண வேலையில் கூட்டு மொத்தம் ரூபா 180,000 பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் நீண்டகால பாவனைக்கு ஏற்ற வகையில் போதியளவு பராமரிப்பின்றி காணப்படுகின்றது. | இனி வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| 3) மேற்படி பூங்காவிற்கு ஒரு வேலை மேற்பார்வையாளர் மற்றும் 02 கூலித் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டும் புற்கள் வளர்ந்துள்ளதுடன் 2017 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 3,000,000 அதிகமான பெறுமதியுள்ள விளையாட்டு உபகரணங்கள் பராமரிப்பின்றியும், உடைந்தும் காணப்பட்டுள்ளது. | நீர் ஊற்றவும், பராமரிக்கவும் நாளாந்தம் ஊழியர்கள் நியமிக்கப் பட்டுள்ளதுடன் மாலை நேரங்களில் நுழைவுச்சிட்டு வழங்குவதற்காக ஒரு ஊழியரும் ஒரு காவலாளியும் கடமையில் ஈடுபடுகின்றனர். | உரிய பராமரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| இ) பெண்கள் மற்றும் அங்கவீனர்களுக்கான மலசலகூடம் அமைத்தல் | | |
| மேற்படி வேலைத் திட்டமானது பெண்கள், அங்கவீனர்களுக்காக அமைக்கப்பட்டிருப்பினும் அவ்வசதியினை பெற்றுக் கொள்வதற்கான (சாய்தளம், கைப்பிடி) உட்கட்டமைப்பு வசதிகள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக் காமையினால் ரூபா 437,000 பெறுமதியான மேற்படி வேலை பூரண பயன்பாட்டை நாளது வரை பெற்றுக் கொள்ளவில்லை. | குறித்த கதவுக்கான enamel painting வேலைத்திட்டம் தற்போது செய்து முடிக்கப் பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| **அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| (i) ஆரம்ப நிலை மட்டத்தில் 14 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தில் 08 பதவி வெற்றிடங்களுக்குமாக மொத்தமாக 22 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு கோரி கடந்த வருடம் உள்@ராட்சி ஆணையாளருக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| **ஆ) ஊழியர் கடன்கள்** | | |
| அமைய ஊழியர் ஒருவருக்கு வழங்கப்பட்ட ரூபா 102,620 தொகையான இடர்கடன் 11 ஆண்டுகளாக அறவீடு செய்யப்படாது நிலுவையாக காணப்படுகின்றது. | குறிப்பிட்ட ஊழியர் கடன் பெறும் போது 10 வருட சேவையை பூர்த்தியடைந்தமையால் கடனுக்கான பிணையாளி சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பில் மூன்று நாட்கள் கட்டைபறிச்சான் உப அலுவலகத்தில் கடமையாற்றி வருவதுடன் மீதி இரண்டு நாட்கள் பிரதேச சபையில் உள்ளக கணக்காய்வு பணிகளை மேற்கொண்டார். இதனால் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை. | சுயாதீன உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 2017 இன் 19ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி இலக்கு சட்டத்திக்கு அமைவாக, 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நாட்டில் ஏற்பட்ட கொரோனா 19 மற்றும் அசாதாரண சூழ்நிலைமை காரணமாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதுள்ளது. நிலை பேறான அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டும் அதற்கான நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்பட வில்லை. எதிர்வரும் காலங்களில் முறையாக மேற்கொள்ளபபடும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.3 ஏனைய அவதானிப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய இருப்புக் கணிப்புச் செய்த குழுவின் அறிக்கைக்கு அமைவாக சபையில் காணப்படும் 03 தண்ணீர் பௌசர்கள், 1 மோட்டார் சைக்கிள், 1 திண்மக் கழிவு அகற்றும் பௌசர் மற்றும் 1 குழாம் அணியினருக்கான பிக்கப் வாகனங்கள் என்பவற்றை அகற்றுவதற்கு பணித்திருந்தும் 5 வருடகாலத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வாகனங்களை உரிமைமாற்றம் செய்த பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |